தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

பேச்சுப் போட்டி 09-06-2018 ஆண்டு:- ஐந்தாம் வகுப்பு

அனைவருக்கும் வணக்கம்

**நட்பு**

நாம் யாரோடு பழக விரும்புகிறோமோ அவருடன் இனிமையாகப் பழக வேண்டும். ஆனால் உடனே அப்பழக்கத்தை நட்பாகக் கருதக் கூடாது.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" என்கிறார் திருவள்ளுவர்.

ஆபத்தில் உதவுவதே நட்பு. நாம் சிரிக்கும் போது சிரித்து, அழும்போது எம்முடன் கூட அழுபவர் தான் நட்புக்குரியவர்.

நண்பர்கள் மூன்று வகைப்படுவர். முதலாவது பனை போன்றவர்கள். பனை தானாகவே முளைத்து, வளர்ந்து, தனது உடல், பழம் போன்றவற்றை உலகிற்கு வழங்குகிறது. எம்மிடம் எந்த உதவியையும் எதிர்பாராது எமக்கு உதவுபவர்கள் இவர்கள்.

இரண்டாம் வகையினர் தென்னை போன்றவர்கள். தென்னைக்கு அடிக்கடி தண்ணீர் ஊற்றி வளர்த்தால் தான் பயன் தரும். அதைப் போல உதவியை எதிர்பார்த்து நண்பனாக இருப்பவர்கள் இவ்வகையினர்.

மூன்றாவது வகையினர் வாழை மரம் போன்றவர்கள். தினமும் தண்ணீர் ஊற்றினால் தான் வாழை பயன் தரும். அதைப்போல இவர்கள் எம்மிடம் உதவி பெற்றால் தான் அதனை எமக்கு மீண்டும் தருவர்.

நாம் பனை மரம் போன்ற இயல்பு கொண்டவர்களுடன் மட்டுமே நட்பைப் பேண வேண்டும். எமக்கும் நல்ல நண்பர்கள் கிடைக்க வேண்டும் என இறைவனை வேண்டுவோம்.

நன்றி

வணக்கம்

(சொற்கள்: 118 )